பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

22 03 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நீர் சேமிப்பின் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.
- பேரிடர் காலங்களில் ஒரு உயிரிழப்புக்கூட ஏற்படக் கூடாது என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பான கூட்டு நடவடிக்கைக்குழுவின் கூட்டம் தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.
- திமுக அரசின் தோல்விகளை மறைக்கவே திரு மு.க.ஸ்டாலின் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை கையில் எடுத்திருப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- உலகக்கோப்பை கபடி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>>**

நீர் சேமிப்பின் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச தண்ணீர் தினத்தை முன்னிட்டு, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எதிர்கால சந்ததியினர் நலனை பாதுகாப்பதில் நீர் சேமிப்பு முக்கிய பங்கு வகிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நீர் சேமிப்பு மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்ற நோக்கில் திரு நரேந்திர மோடி பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

நீர் சேமிப்பில் சாதனை படைத்தவர்கள் குறித்து அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் தமது மன் கி பாத் உரையிலும் பிரதமர் எடுத்துரைத்து வருகிறார்.

இதன் காரணமாக, தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் உள்ள நாகநதி தற்போது வற்றாத ஜீவ நதியாக உருவெடுத்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தில் பணியாற்றும் பெண்கள் மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நாகநதி ஆற்றில் நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தனர்.

இதன் காரணமாக, கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த நாகநதியில் வற்றாத நீர் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பொதுமக்கள் - 41 செகண்ட்ஸ்)*

சர்வதேச நீர் தினத்தையொட்டி, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் விடுத்துள்ள செய்தியில், நீர் சேமிப்பு என்பது கொள்கையாக மட்டுமின்றி மக்கள் இயக்கமாகவும் உருவெடுத்ததற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள இந்த செய்தியில், நீர் ஆதாரங்களை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பட்டியலிட்டுள்ளார்.

இந்நாளில் நீர் சேமிப்பது என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்போம் என்றும் திரு சி ஆர் பாட்டீல் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளையொட்டி, மழைநீர் சேமிப்புக்கான இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

நாடு முழுவதும் 148 மாவட்டங்களில் இந்த இயக்கம் நடத்தப்பட உள்ளதாக நீர்வளத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

பேரிடர் காலங்களில் ஒரு உயிரிழப்புக்கூட ஏற்படக் கூடாது என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் இதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருவதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பேரிடர் குறித்த தகவல்களை முன்கூட்டியே வழங்குவது, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக நிவாரண உதவிகளை மேற்கொள்வது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பங்கள் தொடர்பாக, மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு விரைவு நீதிமன்றங்கள் மூலம் தீர்வுகாணப்பட்டுள்ளதாக மகளிர் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 754 விரைவு நீதிமன்றங்கள் மூலம் இந்த வழக்குகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் சார்பில், பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பான கூட்டு நடவடிக்கைக்குழுவின் கூட்டம் தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

கேரளா, தெலங்கானா, பஞ்சாப் முதலமைச்சர்கள் உட்பட பலர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதற்கிடையே, தமிழகத்தை தொடர்ந்து வஞ்சித்து வரும் கர்நாடக, கேரள மாநில தலைவர்களுக்கு வரவேற்பு அளிக்கும் திரு மு.க.ஸ்டாலினை கண்டித்து, பிஜேபி சார்பில் அக்கட்சியினர் கருப்புக்கொடி போராட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

திமுக அரசின் தோல்விகளை மறைக்கவே தொகுதி மறுசீரமைப்புப் பிரச்சினையை திரு மு.க.ஸ்டாலின் கையில் எடுத்திருப்பதாகவும் பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<<>>>>>>

பீகார் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, தலைவர்கள் பலர் வாழ்த்து செய்திகள் விடுத்துள்ளனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், வளர்ச்சியடைந்த பீகாரை உருவாக்குவதற்கு அம்மாநில மக்கள் தொடர்ந்து பாடுபடுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், பீகாரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில் கடின உழைப்புக்கு சொந்தமான பீகார் மக்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 11 பேர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் மீன்வளத்துறை அதிகாரிகள் அவர்களை வரவேற்று, ராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேகா – 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை நூறாக அதிகரித்துள்ளது.

பத்து சிறுவர்களும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவார்கள் என்று அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

**<<<<<<>>>>>>**

ஜப்பான், சீனா, தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று டோக்கியோவில் நடைபெறுகிறது.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>>**

கடல்சார் பாதுகாப்பு தொடர்பான பேச்சுக்கள் இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையே புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை இணைச்செயலர் இதில் பங்கேற்றார்.

கடல்சார் பாதுகாப்பில் பரஸ்பரம் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

**<<<<<<>>>>>>**

நமீபியாவின் முதலாவது பெண் அதிபராக திருமதி **Netumbo Nandi Ndaitwah** இன்று பதவியேற்றார்.

அந்நாட்டு துணை அதிபராகவும், வெளியுறவு அமைச்சராகவும் பல்வேறு பொறுப்புகளை அவர் வகித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் பதவிக்கான தேர்தலில் 58 சதவீத வாக்குகளை திருமதி **Netumbo Nandi Ndaitwah** பெற்றார்.

**<<<<<<>>>>>>**

அமெரிக்காவுடன் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பாக ஒருங்கிணைந்த பேச்சுக்களை நடத்த தாம் விரும்புவதாக கனடா பிரதமர் திரு **Mark Carney** கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கனடாவின் இறையாண்மைக்கு அமெரிக்க அதிபர் மதிப்பளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்பின்னரே பேச்சுக்களை நடத்த இயலும் என்றும் திரு **Mark Carney** கூறினார்.

**<<<<<<>>>>>>**

அமெரிக்காவை சேர்ந்த பிரபல குத்துச்சண்டை வீரர் **George Foreman** இன்று காலமானார் அவருக்கு வயது 76.

அன்னாரது மறைவுக்கு பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலக கோப்பை கபடி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்தின் **Wolverhampton**-ல் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 69-24 என்ற புள்ளிக்கணக்கில் ஹங்கேரியை வென்றது.

**<<<<<<>>>>>>**

சீனாவில் நடைபெற்ற சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இந்தோனேஷியாவின் **Priska nugroho** இணை பட்டம் வென்றது.

**<<<<<<>>>>>>**